**2018–ம் ஆண்டு ஜீன் மாதம் 19–ஆம் தேதி (19.06.2018) செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.**

1. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.60)-ல் ஈரோடு சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமம், ரீ.ச.எண்.19/7, 20/1 பகுதியில் 159864.00 ச.அடி பரப்பளவில் விவேகானந்தன் நகர் என்ற பெயரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு , வரன்முறை வேண்டி மனுதாரரின் விண்ணப்ப எண். DTCP/L/0054621/2017-ன்படி உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 33/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.3529/2018 நாள்.07.06.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்

கோப்பு எண். 3377/18/இ1

**61. அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்.1013/3 பகுதியில் 121990.25 ச.அடி பரப்பளவு இடத்தில் ஸ்ரீ ராம் நகர் என்ற பெயரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி மனுதாரரின் விண்ணப்ப எண் DTCP/L/0044647/2017-ன்படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 31/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.3675/2018 நாள்.14.06.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்

கோப்பு எண். 3375/18/இ1

**62. அனுமதிக்கப்பட்டது.**

3. இம்மாநகராட்சிக்கு எதிராக திரு.சி.செல்வராஜ் வரிவசூலர்(கு.ப.நீ) என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.**619/2018**–ஐ தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.**6,000/–**ஐ வழங்குமாறு திரு.எம். ராஜாமதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் என்பவரது **13.06.2018**–ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இம்மாமன்ற **29.05.2013**–ந் தேதிய தீர்மானம் எண். **510**-ல் தொகுதி வழக்குகளுக்கு வழக்கு கட்டணம் முதல் மூன்று வழக்குகளுக்கு தலா ரூ.**6,000/–** வீதமும், மூன்று வழக்கிற்கும் மேல் கூடுதல் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.**1500/–** வீதமும் அதிகபட்சம் ரூ.**30000/–** இரண்டு தவணைகளில் வழங்க அனுமதிக்கப்பட்டது.

அதன்படி மேற்படி வழக்கிற்கான கட்டணம் ரூ.**6,000/–**ஐ, திரு. எம். ராஜாமதிவாணன் அவர்களுக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1. அனுமதி வழங்கலாம்.
2. மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

(சி2/2930/2018)

**63. அனுமதிக்கப்பட்டது.**

4. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட நேதாஜி புதிய வணிக வளாக தரைத்தளக் கடை எண். 10 கடைக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 30.05.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | நேதாஜி புதிய வணிக வளாக தரைத்தளக் கடை எண். 10 | என்.எஸ். யோகேஷ்வரன் | 4900- | **கே.என். சிவப்பிரகாசம்** | **5100-** |

நேதாஜி புதிய வணிக வளாக தரைத்தளக் கடை எண். 10-க்கு திரு. கே.என். சிவப்பிரகாசம் என்பவர் ரூ.5100-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி நேதாஜி புதிய வணிக வளாக தரைத்தளக் கடை எண். 10-க்கு திரு. கே.என். சிவப்பிரகாசம் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.06.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ**1/982/2017**

**64. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலையில் தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடை எண். 20 கடைக்கு ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **30.05.2018** அன்று நடைபெற்றது. மேற்படி ஏல நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒரு கடைக்கு இரண்டு நபர்கள் வீதம் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண் | கடை எண் | கடையின் அளவு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஒப்பந்தப்–புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஒப்பந்தப்–புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | 20 | 6'x6' அடி | **எம். கார்த்திகேயன்** | **2400–** | கே.ஆர். ஸ்ரீதரன் | **1950–** |

மேற்படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 6'x6' அடி அளவுள்ள கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வியாக ரூ.**2400–**க்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்டுள்ள 6'x6' அடி அளவுள்ள கடை எண். **20–**க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை ரூ.**2400–**ஐ ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரிய திரு. எம். கார்த்திகேயன் என்பவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.06.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

**(அ1/11205/2009)**

**65. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. சாலை வணிக வளாக தரைத்தளக் கடைகள் (90 கடைகள்) முன்பு இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் துறை மூலம் வசூல் பணி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தினசரி ரூ.250– வசூல் ஆகின்றது. துறை மூலம் வசூல் செய்யும் பணிக்கு இம்மாநகராட்சி பணியாளர்கள் மூன்று பேர் பணியாற்றுகின்றனர். தினசரி வசூலாகும் தொகை பணியாளர்களின் ஊதியம் மற்றும் ரசீது புத்தகம் அச்சடிக்க ஆகும் செலவினம் ஆகியவற்றை விட மிக குறைவாக உள்ளமையால் 31.05.2018 முதல் துறை மூலம் வசூல் செய்வதை ரத்து செய்யவும் மற்றும் பொது ஏல நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்படி இடத்தில் 90 கடை உரிமதாரர்கள் மட்டும் கட்டணம் ஏதும் வசூலிக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் வாகனம் நிறுத்தி உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியம் கருதி மேற்படி இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் 31.05.2018 முதல் துறை மூலம் வசூல் செய்வதை ரத்து செய்யவும் மற்றும் பொது ஏல நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்யவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**66. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோடு தினசரி அங்காடியின் வணிக வளாக தரைத் தளக் கடை எண்கள் 5, 7, 8, 15, 19, 21, 36, 43, 47, 61 மற்றும் 68 ஆகியவற்றின் உரிமதாரர்கள் மேற்படி கடைகளை பொது ஏலத்தின் மூலம் கடும் போட்டியில் எடுத்து நடத்தி வந்ததாகவும், தற்போது வியாபார சூழ்நிலையின் காரணமாக மேற்கொண்டு கடைக்கு வாடகை செலுத்தி தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் 30.06.2018 உடன் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தனது 08.06.2018–ம் தேதிய கடிதங்களில் தெரிவித்துள்ளார்கள்.

| வ.எண். | கடை எண். | உரிமதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | 5 | திரு. ஜி. வைரவேல் |
| 2. | 7 | திரு. ஆர். ராஜா |
| 3. | 8 | திரு. பாட்டப்பன் |
| 4. | 15 | திரு. பி. ராஜா |
| 5. | 19 | திரு. மோதிலால் |
| 6. | 21 | திரு. எஸ்.ஆர். ரங்கசாமி |
| 7. | 36 | திரு. நட்ராஜ் |
| 8. | 43 | திரு. ஆர். செந்தில்குமார் |
| 9. | 47 | திரு. வினோத்குமார் |

| | | |
|---|---|---|
| 10. | 61 | திரு. மாதேஸ்வரன் |
| 11. | 68 | திரு. மோகன்குமார் |

ஆகவே மேற்படி கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/11205/2009

**67. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

8. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலை தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடைகள் கீழ்கண்டுள்ளவற்றுக்கு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். அ1/11205/2009, நாள்.05.11.2016–ன்படி 05.11.2016 முதல் அதன் உரிமதாரர்களுக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு–

| வ. எண். | கடை எண். | உரிமதாரர் திரு./திருமதி. | மாத வாடகை | மொத்த கேட்புத் தொகை (நவம்பர்– 16 முதல் ஜூலை–17 வரை – 9 மாதங்கள்) |
|---|---|---|---|---|
| 1. | 5 | ஜி. வைரவேல் | 4500– | 40500– |
| 2. | 7 | ஆர். ராஜா | 6100– | 54900– |
| 3. | 8 | கே. பாட்டப்பன் | 5500– | 49500– |
| 4. | 9 | ஆர். மின்னல் முருகேஷ் | 10000– | 90000– |
| 5. | 15 | பி. ராஜா | 8250– | 74250– |
| 6. | 19 | கே. மோதிலால் | 3650– | 32850– |
| 7. | 20 | பா. கௌடில்யன் | 4600– | 41400– |
| 8. | 21 | ரங்கசாமி | 10000– | 90000– |
| 9. | 22 | கே. அருண்பிரசாத் | 3400– | 30600– |
| 10. | 24 | எம். முரளி | 3050– | 27450– |
| 11. | 26 | மாதேஸ்வரன் | 4200– | 37800– |
| 12. | 40 | ஏ. நாகராஜ் | 4150– | 37350– |
| 13. | 43 | ஆர். செந்தில்குமார் | 6050– | 54450– |
| 14. | 47 | பி. வினோத்குமார் | 6650– | 59850– |
| 15. | 52 | ஜி. அப்துல் ஹக்கீம் | 4050– | 36450– |
| 16. | 53 | ஆர். சீனிவாசன் | 10000– | 90000– |
| 17. | 54 | பி. பால்ராஜ் | 2450– | 22050– |
| 18. | 55 | எம். வெங்கடேஷ்பிரபு | 7700– | 69300– |
| 19. | 56 | எல். ராமமூர்த்தி | 5800– | 52200– |
| 20. | 57 | கே. நிஜாமுதீன் | 6300– | 56700– |

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | 58 | எம். ராஜேந்திரன் | 5885– | 52965– |
| 22. | 59 | மு. அப்துல் ஹமீது | 4600– | 41400– |
| 23. | 60 | சின்ன பகவதி | 8000– | 72000– |
| 24. | 63 | எஸ். சரவணன் | 7300– | 65700– |
| 25. | 65 | டி. விஸ்வநாதன் | 13100– | 117900– |
| 26. | 68 | சி. மோகன்குமார் | 7200– | 64800– |
| 27. | 82 | கே. சின்னசாமி | 3300– | 29700– |
| | | மொத்தம் | **165785–** | **1492065–** |

மேற்கண்டுள்ள கடைகளுக்கு 9 மாத வாடகை மொத்த கேட்புத் தொகை ரூ. **14,92,065–** ஆகும்.

மேற்படி கடைகள் 9 வருடங்களாக ஏல நடவடிக்கையில் இருந்து வந்துள்ளது. அங்குள்ள கடைகளின் ஷட்டர்கள், தரைத்தளம் மற்றும் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது. மேலும் 90 கடைகளுக்கு சேர்த்து 3 மின் இணைப்புகளும், பொதுவில் ஒரு மின் இணைப்பு மட்டும் இருந்தது. இந்த மின் இணைப்புகள் 90 கடைகளுக்கும் போதுமானதாக இல்லாததால், ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை பொறியியல் பிரிவின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி காரணங்களாலும், 9 வருடங்களாக கட்டிடங்கள் உபயோகப்படுத்தாத நிலையில் இருந்ததாலும் உடன் பயன்பாட்டுக்கு கொண்டு வர இயலாத நிலையில் இருந்தது. எனவே மராமத்துப் பணிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பராமரிப்பு பணிகள் முடிவுற்று 01.08.2017 முதல் 90 கடைகளும் கேட்புக்கு கொண்டு வரப்பட்டு தற்போது வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பராமரிப்பு பணிகள் நடைபெற்ற இடைப்பட்ட காலமான 01.11.2016 முதல் 31.07.2017 வரை உள்ள 9 மாதங்களுக்கான மொத்த கேட்புத் தொகை ரூ. 14,92,065–ஐ கேட்புப் பதிவேட்டிலிருந்து தள்ளுபடி செய்ய ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

அனுமதி வழங்கலாம்.

(அ1/11205/2009)

**68. அனுமதிக்கப்பட்டது.**

9. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்றப்படல் வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இம்மாநகராட்சீ பகுதியில் அனுமதியின்றியும், அனுமதி வழங்கப்பட்டுள்ள அளவிற்கு மாறாக கூடுதல் அளவில் விளம்பரப் பலகைகள் நிறுவிய நிறுவனங்களுக்கும் மாநகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டது. ஈரோடு மாநகராட்சியை எதிர்த்து கோல்டன் மீடியா என்ற விளம்பர நிறுவனத்தார் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். வழக்கு எண்.W.P.No.11461 of 2018 இவ்வழக்கினை மாநகராட்சி சார்பில் திரு.எம்.இராஜா மதிவாணன், சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞர் அவர்கள் ஏற்று நடத்தவும் அதற்காகும் வழக்காடு கட்டணச் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

(இ2/6489/2015)

**69. அனுமதிக்கப்பட்டது.**

10. ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டம் சிப்பம் 2—ல் நடைபெறும் பணிகளில் கட்டுமான பொருட்கள், வால்வுகள், Stone ware pipes மற்றும் பம்புகள் விநியோகம் செய்ய மூன்றாம் நபர் தரபரிசோதனை செய்ய Dr. அமின் கன்ட்ரோலர்ஸ் (பி)லிட்— சென்னை அவர்கள் கொடுத்துள்ள விலை விபரப்பட்டியல் 0.65% +GST மற்றும் குறைந்த கட்டணமாக 1000+GST பரிசோதனை கட்டணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிப்பம் 2ல் தற்போது Transformer மற்றும் LT Panel ஆகியவவற்றை தரபரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. இவ்வினங்களுக்கு தரப்பரிசோதனை கட்டணமாக GST யை சேர்த்து ரூ. 12060 /— தோரயமாக Dr. அமின் கன்ட்ரோலர்ஸ் (பி) லிமிட், சென்னை அவர்களுக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

அனுமதி வழங்கலாம் .

ந.க.எண்.பாசாதி /5365/2010.

70. அனுமதிக்கப்பட்டது.

11. ஈரோடு மாநகராட்சி மாமன்ற தனது தீர்மானம் எண்: 141 நாள்: 24.11.2017 ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 17 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2017-18 ன் கீழ் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எல்லப்பாளையம் ரோடு பகுதியில் கனிராவுத்தர் குளத்தின் உட்புறப்பகுதியில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்காக வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.73.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **திருவாளர்கள். கே.எம்.பழனிசாமி அன் கோ,** நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (+) 4.97 % கூடுதலாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது. எனவே இதன் அடிப்படையில் பணி உத்திரவு வழங்கப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கழைக்கழகம் (Anna University) திண்டுக்கல் அவர்களின் ஆலோசனையின் படி இடத்தின் தன்மைக்கேற்பவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மூல மதிப்பீட்டில் சில மாற்றங்கள் செய்யவும் அதற்கு தகுந்தற்போல் வடிகால் பக்கச்சுவர் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு அதே மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணி மதிப்பீடு (Working Estimate) தயாரிக்கும் போது கீழ்க்கண்டவாறு இனங்களில் மாற்றம் வரப்பெறுகிறது.

| வ.எண் | இனங்கள் | மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகள் | பணி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகள் |
|---|---|---|---|
| 1 | Earth work excavation for foundation in all kinds of soils and sub soils to full depth | 1825.00 $M^3$ | 2300.00$M^3$ |
| 2 | Cement concrete 1:4:8 mix (One cement four sand and Eight metal) using 40mm ISS hard broken granite stone | 58.00 $M^3$ | 90.00 $M^3$ |
| 3 | Centering for sides and soffits without shuttering including using | 2065.00 $M^2$ | 1450.00 $M^2$ |

| | | | |
|---|---|---|---|
| | MS sheets 90cm x 60cm stiffened (**With Out Strutting)** | | |
| 4 | Plain cement concrete 1:2:4 mix (One cement two sand and four aggregate) using 20mm ISS metal | 220.00 $M^3$ | - |
| 5 | Centering for sides and soffits without shuttering including using MS sheets 90cm x 60cm stiffened (**With Strutting)** | 145.00 $M^2$ | - |
| 6 | Reinforced cement concrete 1:2:4 mix (One cement two sand and four aggregate) using 20mm ISS metal | - | 245.00 $M^3$ |
| 7 | Reinforced Cement Concrete 1:1½:3 mix using 20mm ISS metal (One cement one and half sand and three aggregate) from the approved quarry | 466.00 $M^3$ | 350.00 $M^3$ |
| 8 | Supplying, fabrication and placing in position of mild steel or ribbed tar steel for reinforced cement | 20980.00 Kg | 32600.00 Kg |

எனவே மேற்கண்ட இனங்களின் மூல மதிப்பீட்டில் உள்ள அளவுகள் மற்றும் இனங்களை விட, பணி மதிப்பீட்டில் புதிய இனங்கள் மற்றும் கூடுதல் அளவுகள் செய்யவும். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள் இதே ஒப்பந்ததாரர் இதே ஒப்பந்தப்புள்ளியின் விகிதத்தின் படி ஒப்பந்த தொகைக்கு மிகாமல் இப்பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

இப்பணி திட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசரம் அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்: இ1/987/2018

**71. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சி மாமன்ற தனது தீர்மானம் எண்: 140 நாள்: 24.11.2017 ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 17 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2017-18 ன் கீழ் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சத்தி மெயின் ரோட்டில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **திருவாளர்கள். கே.எம்.பழனிசாமி அன் கோ,** நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (+) 4.98 % கூடுதலாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது. எனவே இதன் அடிப்படையில் பணி உத்திரவு வழங்கப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கழைக்கழகம் (Anna University) திண்டுக்கல் அவர்களின் ஆலோசனையின் படி இடத்தின் தன்மைக்கேற்பவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மூல மதிப்பீட்டில் சில மாற்றங்கள் செய்யவும் அதற்கு தகுந்தற்போல் வடிகால் பக்கச்சுவர் மற்றும் சிறுபாலம்

அமைக்கும் பணிக்கு அதே மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணி மதிப்பீடு (Working Estimate) தயாரிக்கும் போது கீழ்க்கண்டவாறு இனங்களில் மாற்றம் வரப்பெறுகிறது.

| வ.எண் | இனங்கள் | மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகள் | பணி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகள் |
|---|---|---|---|
| 1 | Earth work excavation for foundation in all kinds of soils and sub soils to full depth | 2035.00 $M^3$ | 1800.00$M^3$ |
| 2 | Cement concrete 1:4:8 mix (One cement four sand and Eight metal) using 40mm ISS hard broken granite stone | 91.00 $M^3$ | 81.00 $M^3$ |
| 3 | Centering for sides and soffits without shuttering including using MS sheets 90cm x 60cm stiffened (**With Out Strutting)** | 2375.00 $M^2$ | 1630.00 $M^2$ |
| 4 | Plain cement concrete 1:2:4 mix (One cement two sand and four aggregate) using 20mm ISS metal | 285.00 $M^3$ | - |
| 5 | Centering for sides and soffits without shuttering including using MS sheets 90cm x 60cm stiffened **(With Strutting)** | 110.00 $M^2$ | 25.00$M^2$ |
| 6 | Reinforced cement concrete 1:2:4 mix (One cement two sand and four aggregate) using 20mm ISS metal | 395.00 $M^3$ | 262.00 $M^3$ |
| 7 | Reinforced Cement Concrete 1:1½:3 mix using 20mm ISS metal (One cement one and half sand and three aggregate) from the approved quarry | 25.00 $M^3$ | 233.00 $M^3$ |
| 8 | Supplying, fabrication and placing in position of mild steel or ribbed tar steel for reinforced cement | 21730.00 Kg | 45100.00 Kg |

எனவே மேற்கண்ட இனங்களின் மூல மதிப்பீட்டில் உள்ள அளவுகள் மற்றும் இனங்களை விட, பணி மதிப்பீட்டில் உள்ள அளவுகள் பணி மதிப்பீட்டில் புதிய இனங்கள் மற்றும் கூடுதல் அளவுகள் செய்யவும். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள் இதே ஒப்பந்ததாரர் இதே ஒப்பந்தப்புள்ளியின் விகிதத்தின் படி ஒப்பந்த தொகைக்கு மிகாமல் இப்பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

இப்பணி திட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசரம் அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்: இ1/987/2018

**72. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சி மாமன்ற தனது தீர்மானம் எண்: 139 நாள்: 24.11.2017 ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 17 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2017-18 ன் கீழ் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கனிராவுத்தர் குளத்தில் தடுப்பணை மற்றும் பக்கச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு **திருவாளர்கள். கே.எம்.பழனிசாமி அன் கோ,** நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (+) 4.96 % கூடுதலாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது. எனவே இதன் அடிப்படையில் பணி உத்திரவு வழங்கப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கலைக்கழகம் (Anna University) திண்டுக்கல் அவர்களின் ஆலோசனையின் படி இடத்தின் தன்மைக்கேற்பவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மூல மதிப்பீட்டில் சில மாற்றங்கள் செய்யவும் அதற்கு தகுந்தற்போல் வடிகால் பக்கச்சுவர் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு அதே மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணி மதிப்பீடு (Working Estimate) தயாரிக்கும் போது கீழ்க்கண்டவாறு இனங்களில் மாற்றம் வரப்பெறுகிறது.

| வ.எண் | இனங்கள் | மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகள் | பணி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகள் |
|---|---|---|---|
| 1 | Earth work excavation for foundation in all kinds of soils and sub soils to full depth | 735.00 $M^3$ | 550.00 $M^3$ |
| 2 | Cement concrete 1:4:8 mix (One cement four sand and Eight metal) using 40mm ISS hard broken granite stone | 45.00 $M^3$ | 17.00 $M^3$ |
| 3 | Centering for sides and soffits without shuttering including using MS sheets 90cm x 60cm stiffened **(With Out Strutting)** | 190.00 $M^2$ | 550.00 $M^2$ |
| 4 | Plain cement concrete 1:2:4 mix (One cement two sand and four aggregate) using 20mm ISS metal | 290.00 $M^3$ | 91.00$M^3$ |
| 5 | Centering for sides and soffits without shuttering including using MS sheets 90cm x 60cm stiffened **(With Strutting)** | 375.00 $M^2$ | - |

| | | | |
|---|---|---|---|
| 6 | Reinforced cement concrete 1:2:4 mix (One cement two sand and four aggregate) using 20mm ISS metal | - | 51.00 $M^3$ |
| 7 | Reinforced Cement Concrete 1:1½:3 mix using 20mm ISS metal (One cement one and half sand and three aggregate) from the approved quarry | 140.00 $M^3$ | 167.00 $M^3$ |
| 8 | Supplying, fabrication and placing in position of mild steel or ribbed tar steel for reinforced cement | 8400.00 Kg | 19860.00 Kg |
| 9 | Rough stone dry packing for approved revetments including cost and conveyance of all materials | - | 10.00 $M^2$ |

எனவே மேற்கண்ட இனங்களின் மூல மதிப்பீட்டில் உள்ள அளவுகள் மற்றும் இனங்களை விட, பணி மதிப்பீட்டில் புதிய இனங்கள் மற்றும் கூடுதல் அளவுகள் செய்யவும். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள் இதே ஒப்பந்ததாரர் இதே ஒப்பந்தப்புள்ளியின் விகிதத்தின் படி ஒப்பந்த தொகைக்கு மிகாமல் இப்பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

இப்பணி திட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசரம் அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்: இ1/987/2018

**73. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**14.** மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.**4809/2018/ஈ1, 13.6.2018–** ஆம் தேதிய கடிதத்தில் ஒளிரும் ஈரோடு அமைப்பின் நிறுவனர் மற்றும் செயலர் ஆகியோர் கோரியுள்ளபடி நமது நகரமும் மாவட்டமுமான 'ஈரோடு' தமிழில் ஈரோடு என்று அழைக்கப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது. ஆனால் இதே பெயரை ஆங்கிலத்தில் எழுதும்பொழுது 'ERODE' என்றே எழுதப்பட்டும், உச்சரிக்கப்பட்டும் வருகிறது. எனவே, 'ERODE' என உள்ளதை 'ஈரோடு' என்று தமிழில் எழுவது, உச்சரிப்பது போல ஆங்கிலத்திலும் 'ERODU' என பெயர் திருத்தம் செய்ய மாவட்ட நிர்வாகம் மூலம் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம்.

இ2/3148/2018

**74. அனுமதிக்கப்பட்டது.**